TC-43

**018/DM/19**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I-GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

**I. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 4 = 24)

1. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் கூறும் விளக்கம் யாது?

2. தமிழ் மொழியின் இலக்கிய வளம் குறித்து எழுதுக.

3. பாரதிதாசனின் படைப்புகளில் எவையேனும் நான்கின் பெயரினைக் குறிப்பிட்டு எழுதுக.

4. பொதுமொழி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

5. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கார் ஆற்றிய பணிகள் யாவை?

6. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

7. திரைப்படச் சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?

8. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 6 = 36)

9. பொருளீட்டுவதனால் ஏற்படக்கூடிய பயன்கள் யாவை?

10. திருநாவுக்கரசர் – சிறு குறிப்பு வரைக.

11. நபிகள் நாயகத்தினைக் கண்ட புலியின் நிலையினை விளக்கி எழுதுக.

12. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறிய செய்திகள் யாவை?

13. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

[Turn over

14. பின்வரும் பழமொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

(அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

(ஆ) ஒற்றுமையே வலிமை

(இ) உயிர் கொடுப்பான் தோழன்

(ஈ) ஒழுக்கம் உயர்வு தரும்

(உ) அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு

(ஊ) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

15. குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டு இறைவனிடம் வேண்டுவன யாவை?

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி :** (4 × 10 = 40)

16. உரைநடைப் பகுதியைப் படித்து சுருக்கி எழுதுதல் :

இலக்கியா படிப்பில் படுசுட்டி, அவள்தான் வகுப்பில் எப்பொழுதும் முதலாவதாக வருவாய். அவளுடைய தோழிகள் எல்லோரும் அவளுக்கென்ன கவலை? அவள் அம்மா ஏர் ஆசிரியர்; அவளுக்குப்பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்துவிடுவார். எனவே, அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை என்று கூறுவர். இதனைக் கேட்கும்போது, இலக்கியாவிற்கு அம்மாவை நினைத்தால் பெருமையாக இருக்கும். பள்ளியில் ஆண்டுத் தேர்வில் படிப்பதற்கு ஒரு வாரம் விடுமுறை அளித்தார்கள் இலக்கியா வழக்கம் போல் படித்து நல்ல மதிப்பெண் எடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லாமல் போய் விட்டதால் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்துள்ளதாகவும் கூறினார்கள். அம்மாவுக்கு எதிர்பாராமல் எற்பட்ட நிலையைக் கேட்டு, இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள். இலக்கியா தனக்கேற்பட்ட மன அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வாள்? இலக்கியாவாக, நீங்கள் ஒரு நிமிடம் கற்பனை செய்யுங்கள்.

17. குறட்டை ஒலி கதையினை கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி ஒரு கட்டுரை வரைக.

18. ‘அறவழி விடுதலைப்போர்’ குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. வாழ்க்கையில் அனைவரும் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் பற்றி “கலித்தொகை’ பாடல் கூறுவனவற்றை தொகுத்து வரைக.

20. அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்து எழுதுக.